# ஒரே போர் வீரன் - இரண்டு களங்கள்!



கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் களத்தில் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டு இருக்கிறார். ஓய்வு ஒழிச்சலின்றி பணி. கழகம் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களுக்காக வாக்குகளைத் திரட்டுகிறார். அதற்காகப் பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்.

காலையில் நடைபயிற்சியின் போதும் வாக்காளர் சந்திப்பை ஸ்டாலின் தொடருகிறார். அப்படிப் போகும் போது தெருவோர தேநீர் கடைகளில் தேநீர் அருந்துகிறார். மக்களிடம் வாக்காளர்களிடம் அப்போது விசாரிப்பும் உரையாடலும் நடைபெறுகிறது.

**பூ விற்போர், கறிகாய் விற்போர், பாரம் சுமப்போர், தொழிலாளர்கள் என எவரையும் அவர் விட்டு வைக்கவில்லை, சந்தித்துக் கொண்டே வாக்குகளைக் கேட்டுக்கொண்டே முன்னேறிக் கொண்டிருந்தார். ஸ்டாலின் செல்லுமிடமெல்லாம் வரவேற்கும் மகளிர் திரள். அவர்களிடம் குதூகலம் வானைத் தொடருகிறது. ஏனென்றால் அவர்களுக்காக அவர் அவ்வளவு சாதனைகளைச் செய்து இருக்கிறார். மேலும் அவர்களுக்காகச் சாதனைகளைக் குவிக்க இருக்கிறார்.**

தேர்தல் களத்தில் எதிரிகளின் குற்றச்சாட்டுகளுக்கு ஆணித்தரமான பதில்களைத் தந்து கொண்டே முன்னேறுகிறார். தேர்தல் களத்தில் ஒன்றைப் பரப்புரையின் போது சொன்னார். அதாவது டெல்லி அணிக்கும் தமிழ்நாடு அணிக்கும் போட்டி என்றார். இடையில் உள்ள எடப்பாடிக்கும் நமக்கும் எதுவுமில்லை. நமது இலக்கு டெல்லியை எதிர்கொள்வதே வீழ்த்துவதே எனும் கருத்தை அவர் பேச்சு முன் வைத்தது. இது எல்லோரையும் கவர்ந்தது.

தேர்தல் களத்தில் ஸ்டாலின் பரப்புரை வாளைச் சுழற்றிக் கொண்டே முன்னேறுவது ஒரு புறம் நடந்து கொண்டே இருக்கிறது. தலைவர் மட்டுமன்றி ஓர் அணியே பரப்புரை செய்கிறது; டெல்லியின் மறைந்திருந்து தாக்கும் தேர்தல் களம் மட்டுமல்ல; இன்னொரு களத்திற்கும் அவர் ஆயத்தமாக வேண்டியிருந்தது. திடீரென்று நாடாளுமன்றத்தின் நிகழ்வு பற்றிய ஓர் அறிவிப்பு வெளியாகிறது. இரண்டாவது களம் உருவாகிவிட்டது. அதைத் தலைவர் தமிழ்நாட்டிலிருந்தே சந்திக்கிறார்; நெறிப்படுத்துகிறார்; வழிகாட்டுகிறார்.

அந்தக் களம் தமிழ்நாட்டுத் தேர்தல் களத்தைவிட மிகப் பெரியது. இந்திய களம் அது. ஸ்டாலின் டெல்லியில் இல்லை. ஆனால் அவரின் போர்க்குரல் ஒன்றிய பா.ஜ.க. அரசின் பிரதமருக்குக் கேட்கிறது. நாடாளுமன்றக் கட்டடத்தில் எதிரொலிக்கிறது. பா.ஜ.க.வுக்கு எதிராக உள்ள கட்சிகள் எல்லாம் ஓர் அணியாகத் திரளுகின்றன. ஒருமித்த கருத்தைக் கொள்கின்றன.

நாடாளுமன்றத்தில் பா.ஜ.க. ஒன்றிய அரசு கொண்டு வந்த மூன்று மசோதாக்களை எதிர்க்கட்சிகள் தோல்வியுறச் செய்துவிட்டன. ஆளுங்கட்சி கொண்டு வந்த தீர்மானம் தோல்வி அடைந்து விட்டது.

ஒரு போர்வீரன் ஒரே நேரத்தில் இரண்டு களங்களைச் சந்தித்த நிகழ்வுகளை இந்தியா பார்த்தது. அது என்ன? எப்படி?

ஒரு களம்தமிழ்நாட்டின் தேர்தல் களம். டெல்லி அணியை தமிழ்நாடு அணி பிடறியில் கால்பட ஓடச் செய்ய இருக்கிற களம்.

மற்றொன்று கடந்த ஜன.28 ஆம் தேதி நாடாளுமன்றக் கூட்டத் தொடர் தொடங்கியது. இது நிதி நிலை அறிக்கை விவாதக் கூட்டத் தொடர் ஆகும். ஏப்ரல் 16 வரை நாடாளுமன்ற மக்களவை கூட்டங்கள் இரண்டு கட்டங்களாக நடந்தன. அதன்பிறகு மூன்றாவது கட்டமாக ஏப்ரல் 16 முதல் 18 வரை மூன்று நாள்கள் நாடாளுமன்ற மக்களவை சிறப்பு அமர்வு என்று அறிவிக்கப்பட்டது.

**இந்தச் சிறப்பு அமர்வு எதற்கு நடைபெற இருக்கிறது என்ற செய்தியை அறிந்த மு.க.ஸ்டாலின், ஏப்ரல் 14 ஆம் தேதியே தொகுதி மறுவரையறை சம்பந்தமான மசோதாக்கள் பற்றிய இறுதி எச்சரிக்கையை பிரதமருக்குப் போர் பிரகடனமாக ஓர் அறிக்கையின் மூலம் வெளியிட்டார். அதில் 'எனது தலைமையில் மிகப் பெரிய போராட்டம் இந்தியாவையே திரும்பிப் பார்க்க வைத்திருவோம்' என்று குறிப்பிட்டார்.**

ஏப்.16ஆம் தேதிதமிழ்நாடு முழுவதும் இன்று கருப்புக் கொடி போராட்டம் என்று ஸ்டாலின் அறிவித்தார். இதற்காகத் தலைமைக் கழகம் ஓர் அறிவிப்பை வெளியிட்டது. அந்த அறிக்கையில் வீடுகளிலும் பொது இடங்களிலும் கருப்புக் கொடி ஏற்றுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

தேர்தல் களத்தில் பரப்புரை நிகழ்ச்சியின் போதே ஸ்டாலின் கருப்புக் கொடியை நாமக்கல்லில் உயர்த்தினார். மசோதா எரிந்து சாம்பலாயிற்று. இதுவெல்லாம் மசோதாக்கள் மக்களவையில் தாக்கல் ஆன அன்று நடந்தவை.

இந்த மூன்று நாள்கள் சிறப்புக் கூட்டம் தேவையில்லை என்றாலும் ஒன்றிய பா.ஜ.க. அரசு மூன்று மசோதாக்களை ஏப்ரல் 16 ஆம் தேதி தாக்கல் செய்தது. (1) அரசியலமைப்புச் சட்டம் 131-ஆவது திருத்த மசோதா சட்டம் - 2026 (2) தொகுதி மறுவரையறை மசோதா - 2026 (3) யூனியன் பிரதேசங்களின் சட்டங்கள் திருத்த மசோதா-2026 என இம்மூன்று மசோதாக்களை மக்களவையில் அறிமுகம் செய்து வைத்து சட்ட அமைச்சர் அர்ஜூன் ராம் மேக்வால் பேசினார்.

மசோதாக்களை அறிமுகம் செய்வதற்கே வாக்கெடுப்பு நடந்தது. அறிமுகத்துக்கு ஆதரவாக 251 உறுப்பினர்களும் எதிராக 185 உறுப்பினர்களும் வாக்களித்தனர். இந்த வாக்கெடுப்பும் 40 நிமிட விவாதத்திற்கு பின்னே நிகழ்ந்தது. இந்த மசோதாக்கள் குறித்து 18 மணி நேரம் விவாதம் நடக்கும் என்றும் 17 ஆம் தேதி மாலை 4.00 மணிக்கு மசோதாக்களின் மீது வாக்கெடுப்பு நடக்கும் என்றும் கூறப்பட்டது. இதை மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா தெரிவித்து இருந்தார். ஆனால் அதிக நேரமாயிற்று. மக்களவைத் தலைவர் குறிப்பிட்ட நேரத்திற்கு வாக்கெடுப்பு நடைபெறவில்லை.

என்ன வியப்பு என்றால் இந்த மசோதாக்கள் தாக்கல் செய்த சில மணிநேரங்களில் இவை தோற்கும் என்பதற்குரிய சைகைகளை மிக பலமாக ஸ்டாலின் பரப்புரையின் போது விடாமல் சொல்லிக் கொண்டு இருந்தார். தொலைக்காட்சிகளில் எதிர்க்கட்சிகள் 238 வாக்குகளை மசோதாவுக்கு எதிராக அளிக்கக் கூடும் எனும் செய்திகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தன.

இராகுல் காந்தி ஒன்றிய பா.ஜ.க. அரசு மகத்தான தோல்வியை சந்திக்கும். அப்போது நாங்கள் யார் என்பதை பிரதமர் புரிந்து கொள்வார் என்று பேசினார். இவ்விருவர்களின் பேச்சும் பெரும் வியப்பை ஏற்படுத்தின.

மசோதாவின் மீது டி.ஆர்.பாலு, கனிமொழி கருணாநிதி, ஆ.இராசா, சு.வெங்கடேசன் மிகக் கடுமையாக பா.ஜ.க. ஒன்றிய அரசை விமர்சனம் செய்து பேசினர். இம்மசோதாக்களை எதிர்த்தும் அவை நிறைவேறாது என்றும் பா.ஜ.க. ஒன்றிய அரசு மகத்தான தோல்வியைச் சந்திக்கும் என்றும் ஸ்டாலின் கூறிக் கொண்டே இருந்தார். அவை தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பாகி வந்தது.



– க.திருநாவுக்கரசு
திராவிட இயக்க ஆய்வாளர்

**ஏப்ரல் 17 ஆம் தேதி மாலை 6.00 மணி புதிய சார் மன்னனை வீழ்த்த மக்களவை ஆயத்தமாயிற்று. அரசியல் சட்டத்திருத்த மசோதா என்பதால் இவை நிறைவேற மக்களவையில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. மக்களவையில் 528 உறுப்பினர்கள் வாக்களித்தனர். வெற்றி பெற 352 வாக்குகள் தேவை.**

**ஆளும் ஒன்றிய பா.ஜ.க. அரசு 298 வாக்குகளே மசோதாவுக்கு ஆதரவாகப் பெற முடிந்தது. எதிர்க்கட்சிகள் 230 வாக்குகளை மசோதாவுக்கு எதிராக அளித்தன. வாக்கெடுப்பு முடிவுகள் திரையில் தோன்றிய போது மக்கள் சபையே ஒரு நிமிடம் ஸ்தம்பித்தது.**

**மோடி அரசு 54 வாக்குகள் குறைவாகப் பெற்று 131ஆவது சட்டத் திருத்தம் மிகப் பரிதாபமாகத் தோற்றது. மசோதா தோல்வியுற்ற சில நிமிடங்களில் அதிர்ந்து போன நாடாளுமன்ற விவகார துறை அமைச்சர் கிரண் ரிஜிஜீ மற்ற இரண்டு மசோதாக்களைத் திரும்பப் பெற்றார்.**

சோவியத் ரஷியா மற்றும் சீனாவின் உலகறிந்த இடதுசாரி இயக்கங்களின் இரட்டையர்களான புல்கானின்-குருஷேவ், மா-சே-துங், சூ-யென்-லாய் என்பது போல (அவர்கள் இரட்டையர்களாகக் காட்சியளித்ததை மட்டும் கணக்கில் கொள்க. மற்றபடி அவர்களோடு இவர்களை ஒப்பிட்டதாகக் கருதக் கூடாது.) தெற்காசியாவின் கடைந்தெடுத்த வலதுசாரிகளான நரேந்திர மோடி - அமித்ஷா இரட்டையர்களின் வீழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது. இதைத் தொடர வழிவகை செய்து கொண்டே இருக்க வேண்டும்.

டெல்லி களத்தை-மக்களவைத் தீர்மானங்களை தேர்தல் களத்தில் பரப்புரைச் செய்து கொண்டே ஒன்றிய பா.ஜ.க. அரசை வீழ்ச்சியுறச் செய்துவிட்டார் ஸ்டாலின். எல்லா எதிர்க்கட்சியினருக்கும் தமது நன்றிகளை ஸ்டாலின் தெரிவித்துக் கொண்டார்.

**ஆடிபோய் நிற்கிறது பா.ஜ.க. வெளியில் காட்டாமல் தோல்வியை மறைக்க நாட்டு மக்களுக்கு ஒரு 'சப்பை' உரையை ஆற்றினார் பிரதமர். மல்லிகார்ஜூன கார்கே குறிப்பிட்டது போல 'ஸ்டாலின் என்றால் பிரதமர் மோடிக்கு பயம்' என்பதை நமது கொள்கை ரீதியாக ஸ்டாலின் உறுதிப்படுத்திவிட்டார்.**

தமிழ்நாட்டுத் தேர்தல் களம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஸ்டாலின் கவிமணி பாடியது போல 'நிற்க எனக்கு நேரமில்லை இன்னும் நெடுந் தூரம் போக வேண்டும் அம்மா' என்று விரைந்து கொண்டு இருக்கிறார்.

ஒரே போர்வீரன் ஒரே நேரத்தில் இரண்டு களங்களையும் சந்திக்கிறான். இது திராவிட இயக்க வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயம், மிக பலமான எதிரியை சந்திக்கிறபோது கொள்கைத் துணிவு நமது தலைவர்களிடத்திலே இருந்து இருக்கிறது. அது இரத்தத்தில் கலந்து களத்தில் கருத்தாய் வெடிக்கிறது. வெற்றியை அடைகிறது.

சார் சடசடவென வீழ்ந்தது போல" மோடி ஆட்சி அதிர்ந்து போய் இருக்கிறது. அதிர்ச்சியில் பிதற்றல்கள் அதிகமாகி இருக்கின்றன.

தளபதியின் சுவடுகளில் நமது பாதங்களை அழுத்திப் பதித்துத் தொடருவோம். அவர் கரத்தினைப் பலப்படுத்துவோம்.

**தென்திசையைப் பார்க்கின்றேன்;**
**என்சொல்வேன் என்றன்**
**சிந்தை யெல்லாம் தோள்களெல்லாம்**
**பூரிக்கு தடடா"**

**- புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்**

## 75,000- பி.எல்.ஏ.—2க்களுடன் கலந்துரையாடினார்

# ஓய்வின்றி உழைப்போம் - திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்போம்!

## முதல்முறையாக நவீன தொழில் நுட்பம் மூலம் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப்.22 -**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்களே உள்ள நிலையில், தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றியை உறுதி செய்யும் வகை யில், நேற்று முன்தினம் கழக வாக்குச்சாவடி முகவர்களுடன் (BLA 2) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாடி ஆலோசனைகளை வழங்கினார்.**

கால் பிரிட்ஜிங் (Call Bridging) நவீனத் தொழில்நுட்ப முறையில் ஒரே நேரத்தில் 75000 BLA 2 களுடனும் அலைபேசி வாயிலாக நேரடியாகப் பேசிய முதலமைச்சர் அவர்கள், திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைத்திட இந்த இரண்டு நாட்கள் முழு மூச்சுடன் ஓய்வின்றி உழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு வாக்கும் மிக முக்கியம் என்பதை உணர்ந்து பணியாற்றும் படி கூறினார்.

மேலும் பேசுகையில் "ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் 'கருப்புச் சட்டமான - Delimitation Bill யைக் கொண்டு வந்து தமிழ்நாட்டின் குரலை முடக்கி, நம் மக்களை நம் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தரக் குடிமக்களாக்க முயன்ற சதியை நாம் போராடி வென்றோம். ஆனால் அவர்கள் இதோடு நிறுத்த மாட்டார்கள். Delimitation Billல் நாம் பெற்ற வெற்றி வெறும் டிரெய்லர்தான். இன்னும் பல போர்கள் நமக்கு முன்னால் இருக்கின்றன. மக்களுக்கு இதைத் தொடர்ந்து உணர்த்த வேண்டும். நாம் கட்டியெழுப்பிய - இடஒதுக்கீடு, தமிழர் உரிமைகள், பெண்களின் உயர்வு, சிறுபான்மையினரின் கண்ணியம் - என எல்லாவற்றையும் பின்னோக்கி இழுக்கத் துடிக்கின்ற அவர்களுக்கு எதிராக நாம் வலிமையோடு போராட வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒரு பலவீனமான ஆட்சியை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். அப்போது தான் நம் மாநிலத்தைப் பலவீனப்படுத்தி, டெல்லியிலிருந்து நம்மை ஆட்டிப்படைக்க முடியும் என திட்டம் தீட்டுகின்றனர். அந்தச் சதித் திட்டத்தை வீழ்த்த நம்மால்தான் முடியும். நம் கூட்டணியால் தான் தமிழ்நாட்டைத் தகர்க்க வரும் டெல்லி அணியைத் தடுத்து நிறுத்த முடியும். சட்டமன்றத்தில் நாம் வலுவாக இருக்கும் வரை டெல்லியால் தமிழ்நாட்டின் உரிமைகளைத் தொட முடியாது" என உறுதிபடத் தெரிவித்தார்.

ஒவ்வொரு வாக்குச்சாவடி முகவரும் இந்த இரண்டு நாட்கள் அவரவர் வாக்குச் சாவடிக்கு உட்பட்ட வீடு களுக்கு மீண்டும் ஒருமுறை நேரில் சென்று ஆதரவு கேட்க வேண்டும் என்றும், வாக்குப்பதிவு நாளில் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவான வாக்குகள் ஒன்று கூட விடுபட்டு விடக்கூடாது என்பதையும் வலியுறுத்தினார்.

வாக்குப்பதிவு நாளில் வாக்குச்சாவடி முகவர்கள் செய்ய வேண்டிய முக்கிய ஏற்பாடுகளைப் பற்றி விளக்கியவர் "தன்னார்வலர்த் தொண்டர்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். வாகன வசதிகள் ஏற்பாடு செய்திருக்க வேண்டும். அவரவர் பகுதியில் உள்ள முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் எளிதில் வந்து வாக்களிக்கும் வகையில் அவர்களை நேரில் சென்று அழைத்து வர ஏற்பாடுகள் செய்வது அந்தந்தந்த வாக்குச்சாவடி முகவர்களது பொறுப்பு.

மேலும் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் விழிப்போடு இருக்க வேண்டும். எதிர்க்கட்சியினர் தோல்வி பயத்தில் முறைகேடுகளில் ஈடுபட முயற்சி செய்யலாம். எந்த வித விதி மீறலோ, முறைகேடோ நடந்தால் உடனடியாக வார் ரூம் எண்ணிற்கு (080694 46900) அழைத்து புகார் அளிக்க வேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்.

மேலும் "வாக்குப்பதிவு நாளில், வாக்குப்பதிவு தொடங்கி கடைசி வாக்கு பதிவாகும் வரை வாக்குச்சாவடியிலேயே வாக்குச்சாவடி முகவர்கள் இருக்க வேண்டும். வாக்குப்பதிவு முடிந்த பிறகு, பதிவான வாக்குகளை உறுதிப்படுத்தி, வார் ரூம்க்கு தகவலைத் தெரிவித்து , Form 17 ஐ சேகரித்த பிறகு தான் ஒவ்வொருவரும் ஓய்வெடுக்க வேண்டும்" என கண்டிப்புடன் கூறினார்.

"முடிவுகள் வரும்போது ஒவ்வொரு தொகுதியாக - வாக்குச்சாவடி வாரியாக நாம் பெற்ற வாக்குகளை அலசி ஆராய்வேன். ஒவ்வொரு தொகுதியிலும் அதிக வாக்குகளைப் பெற்றுத் தந்த வாக்குச்சாவடி முகவரை நானே நேரில் சந்திப்பேன் எனவும்" தெரிவித்தார்.

ஐந்தாண்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைத் திட்டங்களால் மக்கள் மத்தியில் நமக்கான ஆதரவு அலையே வீசுகிறது. நமது சூப்பர் ஸ்டார் தேர்தல் அறிக்கை அனைத்து மக்களின் ஆதரவையும் பெற்றுள்ளது. மக்கள் மனநிலையும், களநிலையும் நம் வெற்றியை உறுதி செய்கின்றன.

தமிழ்நாட்டு மக்களின் பேராதரவோடு அடுத்த மாதம் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைப்பது உறுதி.

வெல்வோம் ஒன்றாக.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

## பொய் வாக்குறுதிகளை அளித்து

# மக்களை ஏமாற்றுகிறார் - எடப்பாடி பழனிசாமி!

## அமைச்சர் எ.வ.வேலு - கு.பிச்சாண்டியை ஆதரித்து பிரச்சாரம்!



கீழ்பென்னாத்தூர், ஏப். 22 -

கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் மகளிர் சுயஉதவி குழுக்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் எ.வ. வேலு கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் பேசியதாவது:

"தமிழ்நாட்டில் தற்போது நிலவும் அரசியல் சூழ்நிலையில், எதிர்க்கட்சிகள் பொய்யான வாக்குறுதிகளை அளித்து மக்களை தவறாக வழிநடத்த முயற்சிக்கின்றன. 'வானத்தை வில்லாக வளைப்பேன், மண்ணை கயிறாக திரிப்பேன்' என்று கூறும் வகையில் யதார்த்தமற்ற வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றுகின்றனர்.

எடப்பாடி பழனிசாமி அவர்கள் தனது தேர்தல் அறிக்கையில் கூறிய ஒரு வாக்குறுதியையும் முழுமையாக நிறைவேற்ற வில்லை. ஒரு ரேஷன் கார்டுக்கு செல்போன் வழங்குவேன் என்று கூறினார். ஆனால் அவை எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

ஆனால் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், சொன்ன வாக்குறுதிகளை மட்டும் அல்லாமல், சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றியுள்ளார். குறிப்பாக விடியல் பயணம் திட்டம், மகளிர் உரிமைத்தொகை, காலை உணவு திட்டம், நான் முதல்வன் திட்டம், புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி, இல்லம் தேடி மருத்துவம் போன்ற பல மக்கள் நலத்திட்டங்களை வழங்கியுள்ளார்.

ஆனால் எடப்பாடி தலைமையிலான ஆட்சியில் எந்த ஒரு முக்கியமான திட்டமும் செயல்படுத்தப் படவில்லை.

மேலும், இந்த தேர்தலிலும் மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இல்லத்தரசிகளுக்கான ரூ.8,000 கூப்பன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை ரூ.2,000, நான் முதல்வன் மற்றும் புதுமைப்பெண் திட்டங்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கப்படும். விடியல் பயணம் திட்டமும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் அனைத்தையும் நிச்சயமாக நிறைவேற்றுவார்.

ஆகையால், சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். 'செய்வதை சொல்வார், சொல்வதை செய்வார்' என்பதே தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் அடையாளம்.

அதேபோல், உங்கள் தொகுதி வேட்பாளர் கு.பிச்சாண்டி மிகவும் அமைதியானவர், உங்கள் வீட்டுப் பிள்ளை போன்றவர். எந்நேரமும் அவரை நீங்கள் சந்திக்கலாம். மக்களுடன் எளிதாக பழகும் குணம் கொண்டவர்.

ரூ.8,000 மகளிர் கூப்பன் திட்டத்தின் மூலம், இந்த பகுதியில் உள்ள பெண்கள் தங்களுக்கு தேவையான பொருட்களை வாங்கலாம். குறிப்பாக டிவி, ஃப்ரிட்ஜ், மைக்ரோ ஓவன், வாஷிங் மெஷின் போன்ற உபகரணங்களை வாங்க இந்த திட்டம் உதவும்.

மகளிர்க்காக சிறப்பான ஆட்சி வழங்கக்கூடியவர் மு.க. ஸ்டாலின் என்பதால், அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, உங்கள் வீட்டுப் பிள்ளை கு. பிச்சாண்டியை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்" என்றார்.

இந்த கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா, ஒன்றிய செயலாளர் ஆரஞ்சு ஆறுமுகம், பேரூராட்சி செயலாளர் சி.கே. அன்பு முருகையன், தொகுதி பொறுப்பாளர்கள், பணிக்குழு நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் இளைஞர் அணி மகளிர் அணி சின்னத்திரை நடிகர் சையத் ஜஹிருத்தீன் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.